# ஈவ்லின் இரத்தினம் நூலக எண்ணிமப்படுத்தல் திட்டம்
# ஆண்டறிக்கை 2020/2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | ஈவ்லின் இரத்தினம் நூலக எண்ணிமப்படுத்தல் திட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0078 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | யூலை 2020 - மார்கழி 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | அயோத்தி நூலக சேவை, லிட்டில் எய்ட் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | என். செல்வராஜா, ஈவ்லின் ரட்னம் நூலகம், நூலகர், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 135,758.00<br>2021 - LKR 421,958.00 |

ஈவ்லின் இரத்தினம் பல்லின பண்பாட்டு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இது மறைந்த டாக்டர் ஜேம்ஸ் டி. இரத்தினத்தின் மறைந்த மனைவி ஈவ்லின் விஜயரட்ண இரத்தினம் நினைவாக நிறுவப்பட்டது. டாக்டர் இரத்தினம் அவர்கள் தனது தொடர்புகள் பல்கலைகழகங்களில் இருந்து சேகரித்த புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பை கொண்டிருந்தார். ஆராய்ச்சியாளர்கள் முன்னணி சட்ட பிரமுகர்கள் மற்றும் வணிகர்கள் கற்றறிந்த பணியாளர்கள் எப்போதும் அவரது ஆலோசனைக்காக அங்கு சென்று அவரது நூலகத்தை பயன்படுத்தினர். பின்னர் டாக்டர் இரத்தினம் தனது புத்தகங்களின் தொகுப்பை வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாண கல்லூரிக்கு வழங்கியுள்ளார். அத்துடன் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக புத்தகங்களை சேமிக்க யாழ்ப்பாணத்தில் ஒரு கட்டிடத்தை நிறுவினார். இது ஈவ்லின் இரத்தினம் நிறுவனம் என்று பெயரிடப்பட்டது. இது தற்போது யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நிலையமாக இருக்கிறது.

இங்குள்ள தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான தொகுப்புகளை எண்ணிமப்படுத்தி பாதுகாக்கும் பணியிலே, நூலக நிறுவனம் தனது செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது. இந்த செயற்திட்டம் இலங்கையிலே தமிழ் பேசும் சமூகங்களின் மத்தியிலே இயங்கும் நூலகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களையும், இந்தச் சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களையும் எண்ணிமப்படுத்தி அவற்றைப் பாதுகாத்து ஆவணப்படுத்துவதுடன் தொடர்பானது. இந்தத் தொடர் செயற்பாட்டின் ஒரு பகுதியாக ஈவ்லின் இரத்தினம் நூலகத்தில் காணப்படுகின்ற, இலங்கையினைச் சேர்ந்த தமிழ் பேசும் சமூகங்களின் வரலாறு, அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கல்வி, இலக்கியம், கலை போன்ற விடயங்களுடன் தொடர்பான ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் படி யூலை 2020 ஆரம்பிக்கப்பட்டு தொடரப்படுகின்றது

அடைவுகள்

- ஈவ்லின் இரத்தினம் நூலக பொறுப்பாளருடன் கலந்துரையாடி நூலகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களை எண்ணிமப்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- இந்த நூலகத்திலே இருக்கின்ற இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களுடன் தொடர்புபட்ட ஆவணங்களை அடையாளம் கண்டு அவற்றினைப் பிரித்து வைக்கப்பட்டது.

- ஆவணங்களை நூலக நிறுவனத்திற்கு கொண்டு சென்று எண்ணிமப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டு ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டன.
- ஈவ்லின் இரட்னம் நூலகத்திலுள்ள 746 ஆவணங்கள் 61711 பக்கங்கள் இதுவரை எண்ணிமப்படுத்தப்பட்டு நூலகத்தில் 2020 இணை க்கப்பட்டுள்ளன.
- அவற்றுடன் நூலகத்தில் வலைவாசல் உருவாக்கப்பட்டு ஆவணங்கள் பதிவே ற்றப்பட்டன.

2020 ஆண்டு யூலை முதல் டிசம்பர் வரை மின்வருடப்பட்டு வலைத்தளத்தில் இணைப்பட்ட ஆவணங்களும் பக்கங்களும்

| இல | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | யூலை | 227 | 8600 |
| 2 | ஆகஸ்ட் | 156 | 12643 |
| 3 | செ ப்டம்பர் | 162 | 14,778 |
| 4 | ஒக்டோபர் | 53 | 6754 |
| 5 | நவம்பர் | 81 | 14,778 |
| 6 | டிசம்பர் | 67 | 4158 |
| | மொத்தம் | **746** | **61711** |

2021 ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை மின்வருடப்பட்டு வலைத்தளத்தில் இணைப்பட்ட ஆவணங்களும் பக்கங்களும்

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி | 73 | 7045 |
| | பெப்ரவரி | 44 | 6700 |
| | மார்ச் | 76 | 11425 |
| | ஏப்ர்ல் | 35 | 8140 |
| | மே | 5 | 1758 |
| | யூன் | - | - |
| | யூலை | 12 | 4218 |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் | 24 | 4511 |
| | செ ப்டம்பர் | - | - |
| | ஒக்டோபர் | 395 | 5664 |
| | நவம்பர் | 85 | 3986 |
| | டிசம்பர் | 365 | 6984 |
| | மொத்தம் | **1114** | **60431** |

மொத்தமாக யூலை 2020 இருந்து டிசம்பர் 2021 வரை **1860** ஆவணங்களும் **122,142** பக்கங்களும் மீதரவுடன் மின்வருடப்பட்டு வலைத்தளத்தில் இணை க்கப்படுள்ளன.

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.
- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தமை. .
- புதிய பணியாளர் பயிற்சிகள் அவை சார்ந்த விடயங்கள் நூலகத்திலுள்ள ஆவணங்களை வகைப்பிரித்தலில் காணப்பட்ட இடர்கள்
- நீண்ட நேரம் இரட்னம் நூலகத்தில் செலவிட முடியாமை காணப்பட்டமை.
- ஆவணங்களை இனங்காண்பதில் ஊழியர்களுக்கு காணப்பட்ட சவால்கள்.
- மின்வருடிகள் அடிக்கடி பழுதடைதல் அதனால் மின்வருடுவதில் தாமதம்

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான ஆவணங்களை முழுமையாக பட்டியலிட்டு வகைப்படுத்தல் அவசியம்
- அதற்கான ஆலோசனை குழு ஒன்றை உருவாக்குதல்.
- ஈவ்லின் இரட்னம் நூலத்திலேயே வைத்து எண்ணிமப்படுத்துவதற்கான அனுமதியை பெறல்
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.
- ஊழியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம்
- ஆவணகத்திலுள்ள பெயரிடல், சேகர ஒழுங்குபடுத்தல் முழுமைப்படுத்தப்பட வேண்டும்
- தன்னார்வலர்களை இணைத்து திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னகர்த்துவதற்கான திட்டமிடலை மேற்கொள்ளல்.

பின்னிணைப்பு

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனம்